

**You are Excellent**

# நீங்கள் மேன்மையானவர்



மனிதன் தனது அறிவுக் கூர்மையால் ஏராளமான கண்டுப்பிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளான். வளர்ந்து வரும் நாகரிகம், வாழ்க்கைத் தேவைகள் மனிதனுக்குள் ஒரு தொடர் தேடலை ஏற்படுத்தியுள்ளது. ஆழியின் அடித்தளத்தாய்வுகளும், வானத்தின் கடையாந்திர கண்டுபிடிப்புகளும் வியக்க வைக்கின்றன. வைத்தியம் படித்து மருத்துவனாக, தொழில் கற்று தொழிலதிபராக, அறிவியல் கற்று விஞ்ஞானியாக, சட்டம் கற்று வக்கீலாக இப்படி பல துறைகளிலும் மேன்மையடைந்து வரும் மனிதன், உலக வாழ்வின் உயரத்தையும் சிகரத்தையும் எட்டிப் பிடித்தாலும், தான் எங்கிருந்து வந்தவன்? தனது மேன்மை என்ன? என்பதை மட்டும் இன்னும் ஆராய்ந்து கண்டுபிடித்ததில்லை. என்னத்தைக் கற்றால் மனிதன் மனிதனாகலாம்? திருமறை கூறுகிறது. "எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்கே திரும்புகிறது. உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியில் இறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? (பிரசங்கி 3:21-22) திருமறையிலுள்ள முதல் இரண்டு அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை சிந்தியுங்கள். ஏனெனில் நீங்கள் மேன்மையானவர்! எப்படி?

**⇨ உங்கள் உடலமைப்பு மேன்மையானது!**

மனிதனை சில நிமிடங்களில் தேவன் உண்டாக்கி விட்டார். ஆனால் அந்த உடலைப்பற்றிய ஆராய்ச்சி எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாகியும் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை. மனித சரீரம் மண்ணினால் உருவாக்கப்பட்டது போலவே பறவைகளும் மிருகங்களுமாகிய அனைத்தின் சரீரங்களும் மண்ணினாலேயே உருவாக்கப்பட்டன. (ஆதியாகமம் 2:1-7,19) ஆகிலும் மனித சரீரம் வித்தியாசப்பட்டது. மனித உடலமைப்பு பூமியின் மண் தூளினாலும் (Dust of the earth) (மூலபாஷையாகிய எபிரேய மொழி அகராதி எண் 1083.) பறவைகளும், மிருகங்களும் கரடு முரடான மண்ணினாலும் (Soil or Dirt of the earth) (எபிரேய மொழி அகராதி 125, 127) உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. மனித உடலமைப்பு மென்மையாகவும், பறவைகள், மிருகங்களின் உடலமைப்பு கடினத் தன்மையுள்ளதாகவும் இருப்பதே மேற்குறித்த உண்மைக்கு சான்று. தேவ ஞானம் இதிலே விளங்குகிறது. இதனடிப்படையில் நீங்கள் மேன்மையானவர்.

**⇨ உங்கள் வாழ்வு ஆதாரங்கள் உங்களை மேன்மையாக்குகிறது! (ஆதி.1:3-27)**

நீங்கள் உங்கள் புதிய வாழ்வைத் துவங்கும் போது, உங்கள் தேவைகள் ஏராளம்; குடியிருக்க ஒரு இடம், அடிப்படையிலான உணவு மற்றும் தண்ணீர் வசதி, சுமுகமானச் சுற்றுச் சூழல், குளிர்ச்சியான தட்ப வெப்பம், பயமற்ற வாழ்க்கை, அவைகளுக்குத் தேவையான பொருளாதாரம், இவைகள் அனைத்தையும் தேடிப் பெறுவதில் உள்ள அலைச்சல், மன ரீதியான சரீர ரீதியான டென்சன். அப்படியிருந்தும் எல்லாவற்றையும் பெற்று விடுவோமா? உறுதியாகக் கூற முடியாது. இவையெல்லாவற்றையும் உங்களுக்காக ஒருவர் முன்னேற்பாடாக செய்து வைத்து உங்களைக் கொண்டு போய் விட்டால் எப்படியிருக்கும்? மனிதனை உண்டாக்கிய போது தேவன் அதைத்தான் செய்தார். மனித தேவையான

**அ. ஜீவாதாரம் - தண்ணீர் :** வானத்திலும், பூமியிலும் தனித்தனியே சேமித்து வைக்கப்பட்ட தண்ணீர், நீராவி சுழற்சியால் முற்றிலும் மறைந்து போகாமல் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வரும் தண்ணீர் (ஆதி.1:6-8).

**ஆ. வாழ்வாதாரம் - உணவு :** தானிய வகைகளும், உணவுப் பொருட்களும், புசிப்புக்கேற்ற கனி வகைகளும், பறவை மற்றும் சுத்தப் பிராணிகளும், கடல்வாழ் ஜீவராசிகளும் படைக்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்டது (ஆதி.1:10-13, 2:9).

**இ. வழிநடத்தும் ஆதாரம் - வெளிச்சம் :** முதல் நாளிலேயே வெளிச்சம் உண்டாக்கிய தேவன், நான்காம் நாளில் சூரிய, சந்திர, நட்சத்திர படைப்புகளின் மூலம் மனிதனுக்கு வழிகாட்டவும், இரவு-பகல் அடையாளம் காணவும், பகலையும், இரவையும் ஆளவும் உண்டாக்கினார். (ஆதியாகமம் 1:14-19).

**ஈ. சுவாச ஆதாரம் - காற்று :** குளிர்ச்சியும், சுவாசமும் பெற ஏதுவாக தேவன் மிக அற்புதமான கிரியையாக தாவரங்களை உருவாக்கினார். மனிதன் சுவாசிக்கும் பிராண வாயு (ஆக்சிஜன்) தாவரங்களிலிருந்து வெளிப்படவும், மனிதன் வெளிவிடும் கரியமில வாயுவை (கார்பன்-டைஆக்சைடு) தாவரங்கள் சுவாசிக்கவும் தேவன் சுழற்சி முறையை ஏற்படுத்தினார். எண்ணற்ற மருத்துவ சக்தி கொண்ட தாவரங்களும் உண்டாக்கப்பட்டு இப்படி அனைத்து வசதிகளையும் உண்டாக்கிய பின் கடைசியாக மனிதனை தேவன் உண்டாக்கி "ஆண்டு அனுபவிக்க" ஏதுவாக்கினார். இது தேவனுடைய பராமரிப்பைக் காட்டுகிறது. எதற்கும் தடுமாறாமல் பெற்றுக் கொள்ள வழிவகுத்த தேவன் உங்களையும் மேன்மையாக்கினார் (ஆதி.1:26,27; மத்தேயு 6:25,26)

**⇨ நீங்கள் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருப்பதால் மேன்மையானவர்! (ஆதியாகமம் 1:26, 2:7)**

"பின்பு தேவன், நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று சொல்லி, "தேவன் தமது சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்", (ஆதியாகமம் 1:26,27). உலகில் இன்று 700 கோடிக்கும் மேலான ஜனத் தொகைகளில் யாருடைய சாயல் தேவன் (கடவுள்) இருக்கிறார்? அல்லது யாருடைய சாயல் கடவுளின் சாயல்? முதன் முதலில் உண்டாக்கப்பட்ட ஆதாம் ஏவாள் மட்டும் அவருடைய சாயலா? இல்லை! இங்கே கூறப்படும் சாயல் மாமிச கண்ணோட்டத்தில் கூறப்படவில்லை. ஆதியாகமம் 9:6-ன் படி தேவசாயல் அனைத்து மனுஷனையும் குறிப்பிடுகின்றது. அதாவது ஆவிக்குரிய உள்ளான மனுஷன் என்று அழைக்கப்படுகிற மனித ஆத்துமா தேவனாலே கொடுக்கப்பட்டிருப்பதால் மனிதன் தேவ சாயலைப் பெற்றவன். வேறு எந்த படைப்பிற்கும் இந்த மேன்மையில்லை (ஆதி.2:19). ஏனெனில் "மனிதன் (...)னுடைய சந்ததி" என்று வேதம் கூறுகிறது. (அப்.17:28,29; "நான் குரங்கின் சந்ததி அல்ல).

இந்த ஆத்துமா நமது உயிரோடு கலந்தது. அனைத்து சிருஷ்டிகளும் மண்ணிலே உருவாகி, மண்ணிலே வரும் ஆகாரத்தை புசித்து மரித்தவுடன் மண்ணுக்கே திரும்புகிறது. மனிதனும் இதற்கு விதி விலக்கல்ல. மற்ற சிருஷ்டிகள் உயிர் பிரியும் போது மண்ணோடு முடிகிறது. ஆனால் மனிதனுடைய ஆத்துமாவோ தன்னைத் தந்த தேவனிடத்தில் செல்லுகிறது. (பிரசங்கி 3:18-22, 12:7) ஆகிலும் மனிதன் தனது ஆத்துமாவை கெடுத்துக் கொண்டுள்ளான் (பிரசங்கி 7:29).

மேன்மையான உங்கள் ஆத்துமா, உங்களுடையதல்ல. அது உங்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்டது. ஒரு நாளில் தேவன் அதை உங்களிடமிருந்து எடுத்துக் கொள்வார். அப்பொழுது நீங்கள் சேகரித்த உங்கள் பொன்னோ, பொருளோ, நிலமோ, வீடோ, சொந்தமோ, பந்தமோ உங்களுடன் வருவதில்லை. உங்களை நம்பி தேவன் ஒப்புக் கொடுத்த அந்த ஆத்துமா விலையேறப்பட்ட ஒரு பொக்கிஷம் (2 கொரிந்தியர் 4:7). அது திரும்ப தேவனிடத்தில் செல்லும் போது, என்ன நிலைமையில் செல்லும்? மேன்மையுள்ளதாகவா? பரிசுத்தமுள்ளதாகவா? தேவனுக்கேற்றதாகவா? சாத்தானுக்கேற்றதாகவா? நி(...)ய மகிழ்ச்சிக்காகவா, நித்திய தண்டனைக்காகவா? பரலோகத்திற்கா, நரகத்திற்கா?

**⇨ தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள பாதுகாப்புத் திட்டம் மேன்மையானது.**

தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மரிக்கச் செய்தார் (2 கொரிந்தியர் 5:21, 1 தீமோத்தேயு 1:15). இந்த மேன்மையானத் திட்டம் தேவதூதர்கள் பாவஞ்செய்த போது தேவனால் கொடுக்கப்படவில்லை (எபிரேயர் 2:16). தேவ தூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவர்களாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனுக்கு கை கொடுத்தார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது அவருடைய சித்தமாயிருக்கிறது. ஏனெனில் "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானோம்" (ரோமர் 3:23, 1 தீமோத்தேயு 2:4). அப்படியானால் நரகத்திலிருந்து பாதுகாக்கப்பட நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

1. தேவன் அருளிய வசனங்களைக் **கேட்க** வேண்டும். (ரோமர் 10:17, யோவான் 8:32). 2. **விசுவாசிக்க** வேண்டும் (யோவான் 3:16, 8:24). 3. **இது** வரை தேவனை அறியாமலும் கீழ்படியாமலும் இருந்து விட்டோம். இப்பொழுது மனஸ்தாபப்பட்டு மனதை அவரிடம் திருப்ப வேண்டும். உண்மையான **மனந்திரும்புதல்** தேவை (லூக்கா 13:3, அப்.2:38). 4. "கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன்" என **அறிக்கையிட** வேண்டும் (ரோமர் 10:9,10, மத்தேயு 10:32,33, அப்.8:37-39). 5. **முழுக்கு** ஞானஸ்நானத்திலே கீழ்படிய வேண்டும் (மாற்கு 16:5,16, மத்தேயு 28:8-20, அப்.2:38). அப்பொழுது மீண்டும் நம்மை படைத்தவருடைய சாயலை, புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்வோம் (கொலோசெயர் 3:9,10). மரண பரியந்தம் விசுவாசத்தில் தரித்திருப்போமேயானால், ஜீவகிரீடம் தரிப்பிக்கப்பட்டு, பசி, பட்டினி, கண்ண(...) கவலை, துக்கம், துயரம், சோதனை, வேதனை, மரணமில்லை. மறு உலகில் என்றென்றுமான வாழ்வைப் பெறுவோம் (வெளி.2:10). வாருங்கள் நமது மேன்மையைக் காத்துக் கொள்ள இன்னும் வழி காட்டுகிறோம்.

**மேலும் பைபிளைப் பற்றி வீட்டிலிருந்தபடியே தொடர்ந்து படிக்க, ஆராய தபால் வழியில் அறிய வாய்ப்பு! உடனே உங்கள் தெளிவான முகவரியுடன் எங்களுக்கு கடிதம் எழுதினால் பாட புத்தகங்களை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.**


## கிருபையுள்ள வார்த்தை
### TV நிகழ்ச்சிகள்



**பொதிகை TV**
**சனி காலை 5.30 மணி**

**தமிழன் TV**
**ஞாயிறு, திங்கள் காலை 7.45**



| *மேலும் விபரமறிய.* | தொடர்புக்கு :- |
|---|---|
| **45C/1, சர்ச் சந்து,**<br>**காரணேசன் தெரு, அரசரடி,**<br>**மதுரை – 625 010.**<br>**போன் : 92 4421 4421**<br>Email - pcpr@graciousword.org<br>**www.graciousword.org** | |



சுவிசேஷகன் பிரஸ், மதுரை. போன் : 2383734